DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.116/2023**
Prosecution witness- **PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Radakrishnan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:45 P.M. to 12:50 P.M. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.12.2023
05.12.2023 முதல் விசாரணை

நான் கரடிப்பள்ளத்தில் குடியிருந்து அங்குள்ள கருமாரியம்மன் கோவிலில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

1) இன்றிலிருந்து சுமார் 2 மாதத்திற்கு முன்பாக மதியம் சுமார் 12.00 மணிக்கு குன்னூர் போலிசார் மேற்படி எங்கள் கோவில் அருகே வந்து மோகன் கடையருகே உட்கார்ந்தார்கள். என்னை அழைத்தார்கள். என்னிடம் போலிசார் வந்து விசாரித்து சென்றது தொடர்பாக ஒரு சாட்சி கையொப்பம் கேட்டனர். நான் செய்து கொடுத்தேன். அ.சா.1 சல்மானை எனக்கு யாரென்ற தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் கண்டுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகசரிலுள்ள அ.சா.3ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)**

1) போலிசார் விசாரணையில் 12.02.2023ம் தேதி பாலசுப்ரமணியன் என்பவரின் பங்களாவில் அ.சா.1 சல்மான வேலை செய்து கொண்டிருந்தபோது அவரது சத்தம்

கேட்டு நான் சென்று பார்த்தபோது அவரது இடதுகை மணிக்கட்டில் ரத்தம் வந்துகொண்டிருந்ததை பார்த்ததாகவும் அது சம்பந்தமாக 16.03.2023ம் தேதி காலை 11.15 மணிக்கு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது போலிசார் விசாரணையில் கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.116/2023**
Prosecution witness- **PW.4**

| | | | |
|---|---|---|---|
| Name | : Mohan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:50 P.M. to 12:55 P.M. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.12.2023

05.12.2023 முதல் விசாரணை

நான் கரடிப்பள்ளத்தில் குடியிருந்து டெய்லர் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 2வதாக கண்டுள்ளது எனது கையொப்பம் தான்.

1) இன்றிலிருந்து ஆறுமாதத்திற்கு முன்பாக ஒரு நாள் ஒரு தேதியில் மாலை 04.00 மணிக்கு எனது வீட்டினருகே வைத்து குன்னூர் போலிசார் வந்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். அதில் என்னுடன் வேறு யாரும் கையொப்மப் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. **(பார்வை மகசரில் கண்டுள்ள அ.சா.4ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

1) போலிசார் விசாரணையில் 12.02.2023ம் தேதி பாலசுப்ரமணியன் என்பவரின் பங்களாவில் அ.சா.1 சல்மான வேலை செய்து கொண்டிருந்தபோது அவரது சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது அவரது இடதுகை மணிக்கட்டில் ரத்தம்

வந்துகொண்டிருந்ததை பார்த்ததாகவும் அது சம்பந்தமாக 16.03.2023ம் தேதி காலை 11.15 மணிக்கு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது போலிசார் விசாரணையில் கூறியுள்ளதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.